முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2017 சனவரி

# (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2017-01-21
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பிரிவு A

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

“நிதிக் கூற்றுக்களின் நோக்கமானது பலதரப்பட்ட பயன்படுத்துநருக்குப் பொருளியற் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பயனுள்ள வகையில், உரிமமொன்றின் நிதி நிலைமை, செயற்பாடு மற்றும் நிதி நிலைமை மாற்றங்கள் பற்றிய தகவல்களை வழங்குவதாகும்.”

(a) நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின்படி (Conceptual framework), சொத்தினைப் **பொருள் வரையறை செய்க.** (02 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்படும் மூன்று (03) பிரதான பகுதிகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

“உரிமமொன்று (entity) இலங்கை கணக்கீட்டு நியமம் – LKAS 7 இன் தேவைப்பாடுகளுக்கு அமைய காசுப் பாய்வுக் கூற்றினைத் தயாரித்து உரிமத்தின் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாக முன்னிலைப்படுத்தும்.”

(a) வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்வதில் உரிமமொன்றிற்கான காசுப் பாய்வுக் கூற்றின் பயன்கள் மூன்றைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) LKAS 07 காசுப் பாய்வுக் கூற்று நியமத்தின்படி, காசு மற்றும் காசுச் சமானங்களாகக் கருதப்படும் இரண்டு (02) உருப்படிகளைக் **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சதஹரித (தனியார்) கம்பனி (SPL)** ஆடைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. **SPL** இன் முகாமைப் பணிப்பாளரான **பெரேரா** வெளிநாட்டுச் சந்தைக்கு நீர் புகாத மற்றும் கறைபடியாத புதிய நனோ தொழினுட்ப T – சேட்டுக்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் சந்தை ஆராய்ச்சியினை நடாத்த திட்டமிட்டுள்ளார். அவர் கீழ்வருவன பற்றிய விபரமான பகுப்பாய்வினை கணக்காளரிடமிருந்து கோரியுள்ளார் :

(1) புதுப் பொருளை விருத்திசெய்வதற்காக நிரந்தர அடிப்படையில் விசேட திறனுள்ள ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான தேவையுள்ளது. அந்த ஊழியர்களுக்கு ஊதியமாக மாதாந்தம் ரூ.500,000/- செலுத்தப்பட வேண்டும்.

(2) T – சேட்டுக்களின் வர்த்தக உற்பத்தி ஆரம்பிக்குமுன்னதாக ரூ. 2.5 மில்லியன் கிரயத்தில் மென்பொதியொன்று (software) நிறுவப்பட வேண்டியுள்ளது.

(3) வர்த்தக உற்பத்தி பூர்த்திசெய்யப்பட்டதும் **SPL** ஒரு தடவை செலுத்தப்படும் ரூ. 1 மில்லியன் கிரயத்தில் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் ஒன்றிற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்படி உருப்படி ஒவ்வொன்றையும் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்ய முடியுமா அல்லது இல்லையா என்பதை அதற்கான காரணங்களுடன் **அடையாளங்காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 04

2016 ஏப்ரல் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தொக்குக் கணக்கெடுப்பின்படி, **வரையறுக்கப்பட்ட ஓட்டோ கெயார் (தனியார்) கம்பனியிடம்** 16,000 அலகுகள் மூலப்பொருட் தொக்கு இருந்ததுடன், அவற்றின் அலகுக் கிரயம் ரூ.16/- என களஞ்சிய எழுதுவினைஞர் தெரிந்துகொண்டுள்ளார். கம்பனி அதன் தொக்குகளை நிறையேற்றிய சராசரிக் கிரய முறையில் மதிப்பிடுகிறது.

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2016 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்காக களஞ்சியத்தி லிருந்து பிரித்தறியப்பட்டன. :

காலாண்டின்போது கொள்வனவுகள் :

| திகதி | அலகுகளின் எண்ணிக்கை | அலகொன்றின் கிரயம் (ரூ.) |
|---|---|---|
| 2016.04.20 | 10,000 | 17 |
| 2016.05.15 | 37,000 | 15 |
| 2016.06.10 | 41,000 | 18 |

காலாண்டின்போது உற்பத்திக்காக வழங்கப்பட்ட தொக்குகள் கீழ்வருமாறு :

| திகதி | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2016.04.10 | 5,000 |
| 2016.05.25 | 30,000 |
| 2016.06.29 | 8,000 |

**நீங்கள் செய்யவேண்டியது,**

நிறையேற்றிய சராசரி கிரய முறையின் கீழ் 2016 யூன் 30 ஆந் திகதியில் மூலப் பொருட் தொக்கின் கிரயத்தைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

# <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **ஸ்பிரிச்சுவல் டிரேடிங் PLC** யின் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**ஸ்பிரிச்சுவல் டிரேடிங் PLC**

**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | 2016 மார்ச் 31 | 2015 மார்ச் 31 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 5,500 | 5,200 |
| (-) திரள் தேய்மானம் | (1,200) | (950) |
| முன் கொணரற் பெறுமதி | 4,300 | 4,250 |
| முதலீடுகள் | 120 | 120 |
| | 4,420 | 4,370 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 5,800 | 2,400 |
| வியாபார / ஏனைய வருமதிகள் | 6,900 | 7,420 |
| காசும் காசுச் சமானமும் | 400 | 350 |
| | **13,100** | **10,170** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **17,520** | **14,540** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 3,000 | 3,000 |
| கைக்கொள் இலாபம் | 9,600 | 8,200 |
| **மொத்த உரிமையாண்மை** | **12,600** | **11,200** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 1,650 | 1,200 |
| நீண்டகாலக் கடன்கள் | 500 | 700 |
| | 2,150 | 1,900 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| குறுங்காலக் கடன்கள் | 100 | 500 |
| வியாபார சென்மதிகள் | 1,850 | 520 |
| செலுத்தவேண்டிய வட்டி | 250 | 120 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 570 | 300 |
| | **2,770** | **1,440** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **17,520** | **14,540** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வருமான வரிச் செலவு ரூ.450,000/-

(2) 2015 ஏப்ரல் 01 இல் ரூ. 300,000/- கிரயமான நிலையான சொத்தொன்று ரூ. 200,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைத் திகதியில் அந்தச் சொத்தின் திரள் தேய்மானம் ரூ. 50,000/-.

(3) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த வட்டிச் செலவு ரூ. 200,000/-.

(4) ஆண்டின்போது பணிக்கொடைக் கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது பிற முற்றடக்க வருமானம் எதுவும் இருக்கவில்லை. அத்துடன் ஆண்டிற்கு பங்கிலாபம் எதுவும் செலுத்தப்படவோ, பிரகடனப்படுத்தப் படவோ இல்லை.

***நீங்கள் செய்யவேண்டியது,***

**நேரில் முறையைப் பயன்படுத்தி** 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஸ்பிரிச்சுவல் டிரேடிங் PLC** யின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகரக் காசுப் பாய்வினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

வரையறுக்கப்பட்ட **சுப்பீரியர் மனுபக்சரிங் (தனியார்) கம்பனியின்** 2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் மற்றும் அந்தத் திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்ட மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| **ஆண்டு முடிவடைந்த திகதி** | **2016 மார்ச் 31 (ரூ.'000)** | **2015 மார்ச் 31 (ரூ.'000)** |
|---|---|---|
| விற்பனை | 14,500 | 12,200 |
| விற்பனைக் கிரயம் | 10,400 | 9,150 |
| வட்டிச் செலவுகள் | 240 | 220 |
| வருமான வரிச் செலவு | 250 | 175 |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 2,450 | 1,750 |
| ஏனைய முற்றடக்க வருமானம் | 50 | 150 |
| ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம் | 2,500 | 1,900 |

| **திகதியில்** | **2016 மார்ச் 31 (ரூ.'000)** | **2015 மார்ச் 31 (ரூ.'000)** |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் (தொக்கு, முற்கொடுப்பனவு நீங்கலாக) | 4,100 | 4,850 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 2,900 | 2,720 |
| தொக்குகள் | 2,000 | 2,100 |
| முற்கொடுப்பனவுகள் | 450 | 300 |
| உரிமையாண்மை (equity) | 6,700 | 5,200 |
| தனிச்சங்கள் | 2,000 | 2,000 |

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குகளின் நிறையேற்றிய சராசரி எண்ணிக்கை ('000) | 1,500 | 1,500 |

**நீங்கள் செய்யவேண்டியவை,**

மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப வீதம்

(ii) விரைவுச் சொத்து விகிதம்

(iii) நடைமுறை விகிதம்

(iv) தொக்கு இருப்புக் காலம்

(v) பங்கொன்றிற்கான வருவாய்

(vi) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருமானம்(ROCE). (10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட SPL கம்பனி** ரூ. 8.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி குத்தகைக் கம்பனியொன்றுடன் நிதிக் குத்தகை உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்தியது. குத்தகைக் கம்பனியானது வாகனப் பெறுமதியின் 60% க்கு (ரூ. 5,100,000/-) நிதியளிப்புச் செய்ய இணங்கியது. 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்ப வைப்பாக ரூ.536,000/- குத்தகைக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டது.

குத்தகையின் கட்டுறுப்புக்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | 5 வருடங்கள் |
| வட்டி வீதம் | ஆண்டிற்கு 16 % |
| வருடாந்த குத்தகை வாடகை | ரூ. 1,376,880/- |
| குத்தகை வாடகை செலுத்தவேண்டிய திகதி | ஒவ்வொரு ஆண்டின் இறுதிநாள் |

வாகனத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 8 ஆண்டுகள். கம்பனி வாகனங்களை நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது,**

மேற்படி குத்தகை தொடர்பாக 2016 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்று மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றின் பிரித்தெடுப்புக் களைத் **தயாரிக்குக.**

*(குறிப்பு : குத்தகை வாடகைகள் உரிய திகதிகளில் செலுத்தப்படுவதாகக் கொள்க.)*

(06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ஹரித லங்கா கம்பனி** தொடர்புபட்ட கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

- 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி கம்பனி அதன் தேய்மானம் செய்யத்தகு சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்தது. அதன்படி 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியி லிருந்து சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலத்தை மாற்றுவதற்குத் தீர்மானித்தது.

**நீங்கள் செய்யவேண்டியது,**

LKAS 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்திற்கு அமைய மேற்படி விடயம் தொடர்பாக கணக்கீட்டுச் வழிமுறைகளை (Accounting treatment) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பிரிவு *B* முடிவு

# பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

2016 மார்ச் 31 ஆந் திகதியில் **சுஹத ஹோல்டிங் PLC** யின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்ட பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**சுஹத ஹோல்டிங் PLC**
**2016 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயம் / மீள்மதிப்பீட்டில்: | | |
| இறையில் காணி மற்றும் கட்டடம் (காணிப் பெறுமதி -ரூ.5,000,000/-) | 20,000 | |
| கட்டடம் – புத்துருவாகும் வேலை (WIP) | 3,000 | |
| தளபாட, இணைப்புகள் | 4,400 | |
| மோட்டார் வாகனங்கள் | 7,500 | |
| திரள் தேய்மானம் – 2015 ஏப்ரல் 01 இல் : | | |
| கட்டடம் | | 2,600 |
| தளபாட, இணைப்புக்கள் | | 2,550 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,500 |
| தொக்குகள் | 15,040 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 6,850 | 5,400 |
| முற்கொடுப்பனவுகள் | 680 | |
| குறுங்கால முதலீடுகள் | 360 | |
| வங்கி மீதி | 390 | |
| காசுக் கையிருப்பு | 20 | |
| **அபி வங்கி**யிலிருந்து பெற்ற கடன் | | 10,000 |
| 12 % காலக் கடன் (Term loan) | | 5,000 |
| செலுத்தவேண்டிய வட்டி | | 960 |
| விற்பனைகள் | | 77,200 |
| விற்பனைக் கிரயம் | 52,748 | |
| நிருவாகச் செலவுகள் | 4,150 | |
| விநியோகச் செலவுகள் | 5,400 | |
| ஏனைய வருமானம் | | 2,740 |
| பணிப்பாளர் கட்டணம் | 1,000 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 500 | |
| வட்டிச் செலவுகள் | 960 | |
| முன்னைய ஆண்டில் வருமான வரி மிகை ஏற்பாடு | | 150 |
| குறிப்பிடு மூலதனம் (600,000 சாதாரண பங்குகள்) | | 6,000 |
| 2015 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 7,898 |
| செலுத்தப்பட்ட இடைக்கால பங்கிலாபம் | 1,000 | |
| | **123,998** | **123,998** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 இல் கம்பனி காணியை மீள்மதிப்புச் செய்ததுடன் காணியின் பெறுமதி ரூ.1,500,000/- இனால் அதிகரித்துக் காணப்பட்டது. இது சொத்துக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டு, ஏனைய வருமானக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது.

(2) கம்பனி 2014 சனவரி 01 ஆந் திகதி ரூ. 3.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்த மோட்டார் வாகனமொன்றினை 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியில் ரூ. 2 மில்லியனுக்கு விற்பனை செய்தது. இந்த விற்பனையால் பெறப்பட்ட பணம் காசேட்டில் வரவுப் பதிவு செய்யப்பட்டு, வியாபாரச் சென்மதிக் கணக்கில் செலவுப் பதிவு செய்ததைத் தவிர இது தொடர்பில் வேறு பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(3) தேய்மானமானது கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மீது நேர்கோட்டு முறையில் கணிப்பிடப் படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

கட்டடம் : 20 ஆண்டுகள்

தளபாட, இணைப்புக்கள் : 5 ஆண்டுகள்

மோட்டார் வாகனங்க்ள : 5 ஆண்டுகள்

(4) கம்பனியானது செலுத்தவேண்டிய கடன்களாக 2015 ஏப்ரல் 01 இல் பின்வருவனவற்றைக் கொண்டு ள்ளது. இவை கட்டடமொன்றினை நிருமாணிப்பதற்காக **அபி வங்கி**யிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

| | **மீளச் செலுத்தவேண்டிய திகதி** | **ரூ.** |
|---|---|---|
| கடன் 1 - @ 10% | 2016 டிசெம்பர் 31 | 8,000,000 |
| கடன் 2 - @ 8% | 2017 மார்ச் 31 | 2,000,000 |

இந்தக் கடன்களின் விளைவு வட்டி வீதம் அவற்றின் கூப்பன் வட்டி வீதங்களுக்குச் சமமாகும். இந்த ஆண்டின்போது மேற்படி கடன்கள் தொடர்பில் மூலதன மீள்கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டிற்கான இந்தக் கடன்கள் மீதான வட்டி கணக்கேடுகளில் அட்டுறு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியானது 2016 சனவரி 01 ஆந் திகதி புதிய கட்டட நிருமாணத்தினை ஆரம்பித்ததுடன் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி நிருமாணப் பணிகள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2016 மார்ச் 31 ஆந் திகதி கம்பனி கீழே காட்டியவாறு ரூ. 3,000,000/- இனை கட்டட நிருமாணத்திற்கு செலவு செய்ததுடன், இந்தத் தொகை கட்டட புத்துருவாகும் வேலைக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டது :

| | **ரூ.** |
|---|---|
| 2016 சனவரி 01 | 1,700,000 |
| 2016 மார்ச் 01 | 1,300,000 |
| | **3,000,000** |

(5) முற்கொடுப்பனவுக் கணக்கானது 2016 நாட்காட்டி வருடத்திற்காக வியாபாரச் சங்கத்திற்கு (trade association) செலுத்திய வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தைக் கொண்டுள்ளது.

(6) கம்பனிக்கு ரூ. 500,000/- செலுத்தவேண்டியிருந்த வாடிக்கையாளர் ஒருவர் காணாமற் போயுள்ளமை 2016 ஏப்ரல் மாதத்தில் உறுதிப்படுத்தப்பட்டதுடன், இந்தத் தொகையை அறவிடுதல் சந்தேகத்திற்கு இடமானது.

(7) கம்பனி ரூ. 5 மில்லியன் காலக் கடனை (term loan) வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக 2016 மார்ச் 01 ஆந் திகதி பெற்றுக்கொண்டது. இந்தக் கடன் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பித்து வட்டியுடன் அறுபது (60) சமனான மாதாந்தத் தவணைக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

(8) 2016 மார்ச் 31 ஆந் திகதி கீழ்வரும் செலவுகள் கணக்கேடுகளில் அட்டுறுவாக இருக்கவில்லை. :

- 2016 மார்ச் மாதத்திற்கான மின் கட்டணம் - ரூ. 68,000/-.
- 2016 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான தொலைபேசிக் கட்டணங்கள் - ரூ. 24,000/-.

(9) வரிமதிப்பாண்டு 2015/16 க்கான வருமான வரி ரூ. 480,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(10) 2016 மார்ச் 15 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2016 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ள ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ரூ. 2.50 வீதம் இறுதிப் பங்கிலாபம் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

(11) வழங்குவதற்காக நிதிக் கூற்றுக்கள் 2016 யூன் 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக் கப்பட்டன.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

**சுஹத ஹோல்டிங் PLC** தொடர்பில் பிரசுரிப்புத் தேவைக்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (10 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(c) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் மாற்றங்களைக் காட்டும் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(a) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட KDL கம்பனி**யானது **வரையறுக்கப்பட்ட சௌபாக்கியா டிரேடிங் கம்பனியின் (STL)** 60 % சாதாரண பங்குகளை முதலீடு ஒன்றிற்காக ரூ. 100 மில்லியனுக்கு கொள்வனவு செய்தது. அந்தத் திகதியில் **STL** இன் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்குச் சமமாகும்.

2016 மார்ச் 31 ஆந் திகதி **KDL** மற்றும் **STL** இன் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**2016 மார்ச் 31 ஆந் திகதி**

**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | KDL | STL |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 95,000 | 19,500 |
| **STL** இல் முதலீடு | 100,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 10,000 | 10,000 |
| வியாபார வருமதிகள் | 210,000 | 212,000 |
| குறுங்கால முதலீடுகள் | 35,000 | - |
| காசும் காசுச் சமானங்களும் | 5,700 | 1,450 |
| | **260,700** | **223,450** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **455,700** | **242,950** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்குகள் | 200,000 | 100,000 |
| பொது ஒதுக்கம் | 20,000 | 7,500 |
| கைக்கொள் இலாபம் | 123,700 | 61,450 |
| **மொத்த உரிமையாண்மை** | **343,700** | **168,950** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 112,000 | 74,000 |
| | **112,000** | **74,000** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **455,700** | **242,950** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி **STL** இன் சொத்துக்கள், கிரயத்தில் 25% இலாபம் குறிக்கப்பட்டு **KDL** இடமிருந்து கொள்வனவு செய்த ரூ. 5,000,000/- பெறுமதியான தொக்குகளை உள்ளடக்கியது.

(2) சுவீகரிப்புத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூ. 50,000,000/-.

(3) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி **STL** இன் ஏடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| பொது ஒதுக்கம் | 5,000,000 |
| கைக்கொள் இலாபம் | 40,000,000 |

(4) **KDL** இன் வியாபார வருமதிக் கணக்கு **STL** இடமிருந்து வருமதியாகவுள்ள ரூ. 2,000,000/- இனை உள்ளடக்குகிறது. **STL** இன் பதிவுகளின்படி, ரூ. 1,500,000/- தொகை **KDL** இற்குச் செலுத்தப்பட்டுள்ளதுடன் அக்காசோலை 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையில் **KDL** இனால் பெறப்படவில்லை.

(5) 2015 ஏப்ரல் 01 இல், **STL** கம்பனி நிலையான சொத்தொன்றினை **KDL** கம்பனிக்கு ரூ.200,000/-க்கு விற்பனை செய்தது. விற்பனைத் திகதியில் அந்தச் சொத்தின் முன்கொணரற் தொகை ரூ.120,000/- ஆகும். விற்பனைத் திகதியில் இந்தச் சொத்தின் எஞ்சியுள்ள ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும். எவ்வாறாயினும், இதுபற்றி இரு கம்பனிகளினதும் கணக்கேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(i) ஒன்றித்தலினால் ஏற்படும் நன்மதிப்பினைக் **கணிக்குக.**

(ii) 2016 மார்ச் 31 ஆந் திகதி ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.**

(21 புள்ளிகள்)

(b) குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மைகள் தொடர்பாக கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதன் புலனாய்வு அதிகாரத்தினைப் பிரயோகிக்கும்போது, அது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பிரிவு C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |